நாள். 23.03.2023

M.C No. 08/2022

ம.சா. 3

திருமதி. சலேத்அருள்தீபன்

க/பெ. அருள்தீபன்

சத்தியப்பிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

பிரமாணப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

ஆவணங்கள் எதுவும்குறியீடு செய்யப்படவில்லை.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் இல்லை. முதல் மனுதாரர் கேட்டுக்கொண்டதால் நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால்சரிதான். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் நான் ஆசிரியாராக பாலக்கோடு அரசு ஆண்கள் மேல்நிலைபள்ளியில் பணியற்றி வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நான் எனது உயர் அதிகாரியிடம் அனுமதி பெற்றேனா என்றால் அனுமதி வாங்குவது குறித்து எனக்கு தெரியாது.

2. நான் அரசு வேலையில் இருப்பதால் வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு உயர் அதிகாரியிடம் அனுமதி பெறவேண்டும் என்றால் சரியல்ல. நான் இன்றைய தினம் பள்ளிக்கு சென்று வருகை பதிவேட்டில் எனது கையொப்பம் செய்தேனா என்றால் நான் காலையில் பள்ளி சென்றுவிட்டு மதியம் 4 மணி வரை பணியற்றி விட்டு அதற்கு பின்னிட்டு தான் நீதிமன்றம் வந்தேன். நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வேண்டும் என்றால் காலையிலேயே ஆஜர் ஆக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

3. எனது பிரமாணப்பதிரிக்கையில் உள்ள சங்கதிகளை நான் தான் வழக்கறிஞரிடம் கூறினேன். நான் அதில் தவறான சங்கதிகளை கூறியிருந்தால் அது குறித்து சட்டம் நடவடிக்கைக்கு நான் உட்படுவேன் என்று சொன்னால் சரிதான். எனது பூர்விகமானது திண்டுக்கல் ஆகும். தருமபுரிக்கு 2003ம் வருடத்தில் குடி பெயர்ந்தேன்.

4. எனக்கு பணி நியமானமானது எப்போது வேலை வாய்ப்பு அலுவலகத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டது என்றால் நான் TRB தேர்வு எழுதி தேர்ச்சி பெற்று தான் ஆசிரியர் பணியில் சேர்ந்தேன். 2005 அக்டோபர் மாத்தில் ஆசிரியர் பணியில் சேர்ந்தேன். 2006 ம் வருடம் ஆசிரியர் பணியில் சேர்ந்தது தவறு என்றால் சரியல்ல. நான் 2005 ம் வருடம் பணியில் சேர்ந்து எனக்கு பணி வரன்முறையானது 2006 ம் வருடம் தான் கொடுக்கப்பட்டது. 2005 – 2006 காலவருடத்தில் நான் மல்லுப்பட்டியில் ஆசிரியராக பணிபுரிந்தேன்.

5. 2006 ம் வருடத்தில் ஆகஸ்ட் மாதம் முதல் பெரியம்பட்டியில் பணியற்றினேன். நான் செந்தில் பள்ளியில் 2003 முதல் 2005 வரையிலான காலகட்டத்தில் அங்கு பணியாற்றினேன். 2005 ம் வருடத்திற்கு பின்னிட்டு நான் செந்தில் பள்ளியில் பணியற்றவில்லை. பள்ளியிலிருந்து விலகிய பின்னிட்டு எங்களது செல்வாக்கை பயன்படுத்தி அங்கு எ்ங்களுக்கு தேவையான ஆவணங்களை பெற முடியுமா என்றால் பணி சம்மந்தமாக கேட்கும் போது பள்ளியிலேயே எங்களுக்கு தேவைப்படும் ஆவணங்களானது வழங்கப்படும்.

6. மாணக்கர்களின் இவ்விவரங்கள் குறித்து ஆவணங்கள் எதுவும் எடுக்க முடியுமா என்றால் முடியாது. மனுதாரருக்கு 10.02.2006 தேதியில் திருமணம் நடந்தது. மனுதாரருக்கு எப்போது குழந்தை பிறந்தது என்றால் பெரிய மகள் 2007 வருடத்திலும் இளைய மகள் 2011 ம் வருடத்திலும் பிறந்தாள். பள்ளியில் சேர்க்கும் போது எந்த வருடத்தில் அவர்களை சேர்க்க முடியும் என்றால் பெரிய மற்றும் இளைய மகளை PRE KG ஆக இருந்தால் 2 முக்கால் வயதில் சேர்க்க வேண்டும்.

7. நான் எனது பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள வருடத்தில் எதிர்மனுதாரர் குழந்தைகளுக்கான பில்லை கேட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றும் அந்த காலகட்டத்தில் அவர்களுக்கு குழந்தையே பிறக்கவில்லை என்றும் திருமணம் ஆகவில்லை என்றும் வழக்கிற்காக தவறான சங்கதிகளை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல,. மனுதாரர் எனது தோழி என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. நானும் மனுதாரரும்வெவ்வேறு மதத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மனுதாரர் சமுதயத்தில் திருமணத்தின் போது என்ன சீர் வரிசைகள் செய்வார்கள் என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் திருமணத்தின் போது செய்த

சீர்வரிசைகள் குறித்து எனக்கு தெரியும். திருணமத்தின் போது இருந்ததாக கூறுவது குறித்து நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

9. நான் வேறு மதத்தை சேர்ந்தவர் என்பதால் மனுதாரர் திருமணத்தின் போது என்ன சீர் வரிசைகள் செய்தார் என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றும் வழக்கிற்காக தெரியும் என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் திருமணத்தின்போது நகை போட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு ஆதரவாக நான் வேறு நீதிமன்றத்தில் வேறு வழக்கில் சாட்சியம் ஏதேனும் அளித்துள்ளேனா என்றால் அளிக்கவில்லை. மனுதாரர் தாக்கல் செய்த விவாகரத்து வழக்கில் நான் சாட்சியாக உள்ளதாக மனுதாரர் என்னிடம் கூறினார். ஆனால் சாட்சிக்கு மனுதாரர் என்னை அழைக்கவில்லை.

10. நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பானை வரவில்லை என்பதால் சாட்சி சொல்ல செல்லவில்லை. நான் சாட்சியாக இல்லாத காரணத்தினால் தான் என்னை சாட்சியாக அவ்வழக்கில் அழைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவருக்கு எவ்வளவு சம்பளம் என்றால் அது குறித்து தெரியாது. எனது கணவரின் சம்பளம் எவ்வளவு என்று என்னால் கூற முடியவில்லை என்றும் இவ்வறான சூழ்நிலையில் நான் எவ்வாறு எதிர்மனுதாரர் சம்பவம் குறித்து கூறுகிறேன் என்றால் மனுதாரர் எனது தோழி சொல்லி எனக்கு தெரியும்.

11. மனுதாரர் என்ன வேலை செய்கிறார் என்றால் அவர் பகுதி நேர உடற்கல்வி ஆசிரியாக பணிபுரிந்து முன்பு ரூபாய் 7 ஆயிரமும், தற்போது ரூபாய் 10 ஆயிரமும் ஈட்டி வருகிறார். மே மாதம் சம்பளம் கிடையாது. பிரமாணப்பத்திரிக்கையில் ரூபாய் 5 ஆயிரம் மனுதாரர் வருமானம் ஈட்டுவதாக கூறியுள்ளேன் என்றால் அப்பாய்மெண்ட் ஆகும் போது கொடுக்கப்பட்ட சம்பளம் ஆகும். பிரமாணப்பத்திரிக்கை தாக்கல் செய்யும் தேதியில் என்ன சம்பளமோ அது தான் கூறபடவேண்டும் என்றும் மனுதாரர் கேட்டுக்கொண்டதால் அவர் ஈட்டும் வருமானத்தை குறைத்து காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல.

12. மனுதாரரின் தந்தையின் இறப்பிற்கு எதிர்மனுதாரர் வரவில்லை என்றும் எனது பிரமாணப்பத்திரிக்கையில் கூறியுள்ளேன் என்றும் ஒருவரை ஒரு செயலை செய்ய கட்டாயப்படுத்த முடியுமா என்றால் முடியாது. மனுதாரர் எத்தனை வழக்குகள் தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் 4 வழக்குகள் ஆகும். மேற்படி

4 வழக்குகளிலும் மனுதாரருக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு நியாபகமில்லை.

13. மனுதாரரின் தந்தை எதிர்மனுதாரர் பெயரில் சொத்து வாங்கி கொடுத்தாக எனத பிரமாணப்பத்திரிக்கையில் கூறியுள்ளேன் என்றும் அப்பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. என் தோழி என்னிடம் தான் பணம் வாங்கி கொடுத்தார். நான் இது குறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இது குறித்து எனது பிரமாணப்பத்திரிக்கையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றும் வழக்கிற்காக அவ்வாறு கூறியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்தாக கூறுவது குறித்து  எனது வருமான வரி கணக்கு கூறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை,.

14. அரசு வேலையில் இருப்பதால் பணம் பரிவர்த்தனையானது ரூபாய் 20 ஆயிரத்திற்கு மேல் காசோலையாக தான் வழங்க முடியும் என்றும் அரசு விதிமுறைகளுக்கு முரணாக நடந்துள்ளேன் என்றால் சரியல்ல. மேலும் எதிரியானவர் 3, 4 திருமணம் செய்த கொண்ட பெண் ஒருவருடன் கள்ளஉறவு உள்ளதாக கூறியுள்ளேன் என்றும் அது குறித்து நான் நேரடியாக பார்த்தேனா என்றால் நான் கேள்விப்பட்டு தான் கூறுகிறேன். கேள்விப்பட்டு சாட்சியம் அளிக்க முடியயாது என்றும் எதிர்மனுதாரரின் நற்பெயருக்கு நான் கலகம் ஏற்படுத்தும் வகையில் சாட்சியம் அளிப்பதால் நான் சட்ட நடவடிக்ககைக்கு உட்பட்ட நபர் என்றால் சரியல்ல,

15. எதிர்மனுதாரர் தான் தன் மகளை பராமரித்து செலவுகள் செய்து காப்பாற்றி வருகிறார் என்றும் அது குறித்து தெரியமாலேயே மனுதாரருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் மாதம் ரூபாய் 10 ஆயிரம் வருமானம் ஈட்டியும், வாடகை வருமானம் பெற்றும் வட்டிக்கு பணம் கொடுத்தும் வருகிறார் என்றால் பகுதிநேர ஆசிரியராக மட்டும் தான் பணியற்றி வருகிறார். இதர வருமானம் எதுவும் இல்லை. மனுதாரருக்கு இதர வருமானம் உள்ளது என்றும் அவருக்கு ஆதரவாக இல்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

16. எதிர்மனுதாரர் எனக்கு யார் என்று தெரியாது என்றும் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிப்பதால் சட்ட நடவடிக்கைக்கு கட்டுப்பட்டவர் என்றால்

சரியல்ல. நான் பொய்யான சங்கதிகளை கூறி சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியமானது ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.